உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 9 | உருத்ரோத்காரிஷு ஐப்பசிமீ 1923ஷு அக்டோபர்மீ | இதழ் 7 |
|---|---|---|


உள்ளுறை


| | பக்கம். |
|---|---|
| திருச்சிற்றம்பலம் ... ... ... ... | 105 |
| வேதாந்தம் ... ... ... ... ... | 110 |
| இருமணி ... ... ... ... ... | 114 |
| கிரியாமார்க்கம் ... ... ... ... ... | 117 |
| கடவுள் உயிர்களுக்குக் காட்டிக் காண்பவர் ... ... | 120 |
| கடவுள் வேண்டுவார் வேண்டியவாறீபவர் ... ... | 122 |
| அன்பு ... ... ... ... ... | 124 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.



சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1923.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

## சந்தாதாரர்களுக்கு விஞ்ஞாபனம்

இக்காலத்தில் சைவ சமயபரிபாலனம் செய்வாரில்லை. சைவ ஒழுக்கங்கள் குன்றிப்போயின. ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொரு சைவாபிமானிகள் வெளிப்பட்டுச்செய்யும் முயற்சிகளும் அவ்வவர்களோடு அழிகின்றன. இப்படியே அடியேன் செய்யும் முயற்சிகளும் என்னோடேயழிந்து போகலாம். ஆதலால் நான் இப்போது தொடங்கி நடத்திவருவன என்றும் நிலைபெற்று மேலுமேலும் விருத்தியடையுமாறு பெருமுயற்சிகள் செய்துகொண்டிருக்கிறேன். நான் இன்னும் இரண்டொரு வருடம் உயிரோடிருந்தால் இம்முயற்சி இறைவனருளால் முற்றுப்பெறும். இதற்கிடையில் பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவதில் என்மனம் செல்லவில்லை. அவரவர்கள் பலபல உதவிகளை நாடி எழுதுங் கடிதங்களைக் கவனிக்கவும் இயலவில்லை. பத்திரிகை தாமதித்து அனுப்பநேரிடுகிறது. இக்குறைகளை சிலகாலம்வரை அன்பர்கள் பொறுத்துக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

இ. ஆதிமூல முதலியார்.

---


## சருவஞானோத்தர ஆகமம்

### ஞானபாதம் தமிழ் மூலமும், முத்திரத்ந விருத்தியும்

இது ஸ்ரீகண்ட பரமேசுவரரால் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0 தபால் சார்ஜ் வேறு

ஒரு முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்:

போ. முத்தைய பிள்ளை,

சிவாகமசங்கம், தேவகோட்டை.

---

புதிய புதிப்பு! திருமூலர் புதிய பதிப்பு!!

## திருமந்திரம்

பல பிரதிகளுக்கிணங்கப் பரிசோதித்தும், சில அரும் பாடல்களை (*) இக்குறியிட்டு விளக்கியும், இறுதியில் செய்யுள் முதற்குறிப் பகராதி சேர்த்தும் நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டுளது. விலை ரூபா 2 4 0

“நவசக்தி” புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் | உருத்ரோத்காரி௵ ஐப்பசிமீ | இதழ் |
| --- | --- | --- |
| 9 | 1923௵ அக்டோபர்மீ | 7 |

### திருக்குறுந் தொகை

மாத ராரொடு மக்களுஞ் சுற்றமும்
பேத மாகிப் பிரிவதன் முன்னமே
நாதன் மேவிய நல்ல நகர்தொழப்
போது மின்னெழு மின்புக லாகுமே.

## திருச்சிற்றம்பலம்

நற்குஞ் சாக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சாக்கன்று காண்.

சித்தாந்தச் செல்வர்களே!

யான் இன்று எடுத்துக்கொண்ட விஷயம், "திருச்சிற்றம்பலம்" என்பது. இம்மந்திர மொழியின் உள்ளுறை கூறுதற்கு முன்னர் அம்மொழிப் பொருள் விளங்குதற்குரிய சில இயைபுகள் கூறுவாம்.

காணப்பட்ட இவ்வுலகமியாவும் விராட்புருடனுடைய சொரூப மாகும். அவனது அரைக்குக்கீழ் ஏழு உலகமும், அரைக்குமேல் ஏழு உலகமும் நிலை பெறுவனவாம். ஆதலால் இவ்வுலகமும் அவன் உடலின் பாற்பட்டதேயாம். அங்ஙனம் ஆர்ந்த இவ்வுலகத்தில் அநேக தெய்வ ஸ்தானங்களுள்ளன. அவை விராட்புருடன் உடலின் பாற்பட்ட ஆதார ஸ்தானங்களாம். எங்ஙனமெனிற் கூறுதும். மூலாதாரம் திருவாரூர், நாபி திருவானைக்கா, மணிபூரகம் அண்ணாமலை, இதயம் சிதம்பரம், கண்டம் ஸ்ரீ காளஹஸ்தி, புருவமத்தி காசி, பிரமரந்திரம் கைலை, துவாதசாந்தம் மதுரை எனவும்; சென்னி ஸ்ரீ சைலம், நெற்றி கேதாரம், புருவமத்தி காசி, குய்யம் குருக்ஷேத்திரம்,

ஹிதயம் பிரயாகை, ஹிதயநடு சிதம்பரம், ஆரூர் மூலாதாரம் எனவும் உண்மை நூல்கள கூறுகின்றன.

மேற்கூறிய விராட்புருடனுக்கு இடை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளுள்ளன. அவற்றுள் இடைநாடி இலங்கையின் நேர் போகும். சுழுமுனை என்னும் நடுநாடி தில்லை நேர் போகும். அந்த நடுநாடியில் மூலக்குறியொன்று உளது. அக்குறிக்குத் தென் பக்கம் அம்பலமொன்று இருக்கின்றது. இனி,

இவ்வண்டம் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டிருப்பது போல பிண்டமும் ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அண்டத்தியல்பெல்லாம் இப்பிண்டத்தினுமுண்டு. அங்ஙனம் உண்டு என்பதற்கு

" எண்டரு பூதமைந்து மெய்திய நாடிமூன்று
மண்டல மூன்றுமாகி மன்னிய புணர்ப்பினாலே
பிண்டமு மண்டமாகும் பிரமனே டைவராகக்
கண்டவர் நின்றவாறு இரண்டினுங் காணலாமே. "

என்ற செய்யுளே சான்றாம். அன்றியும் அண்ட பிண்டங்களுக்குள்ள சில ஒற்றுமைகள் எடுத்துக் கூறுவாம்.

1. அண்டத்தில் சூரியன் சந்திரன் உண்டு. பிண்டத்தில் இடைகலை பிங்கலைகளுண்டு.

2. அண்டத்தில் பிராணிகள் தோன்றிநின் றழிவன. பிண்டத்தினும் புழு முதலியன தோன்றிநின் றழிவன.

3. அண்டத்திற்குப் பகலிரவுகளுண்டு. பிண்டத்துக்கு சகல கேவலமுண்டு.

4. அண்டம் அசத்தாயும் நித்தியமாயுமுள்ளது; பிண்டம் அவ்வாறேயாம்.

5. அண்டம் ஈசனால் நடத்தப்படும். பிண்டமும் உயிர்க்குயிராயுள்ள இறைவனால் நடத்தப்படும்.

6. அண்டத்தில் திவ்விய க்ஷேத்திரங்களுள. பிண்டத்திலும் ஸ்ரீ பருப்பத முதலிய க்ஷேத்திரங்களுள.

7. அண்டத்தில் கங்கையாதி நதிகளுண்டு. பிண்டத்தில்
ஹிருதயம் = பிரயாகை இடைநாடி = கங்கை
பிங்கலை = யமுனை நடுநாடி = சரஸ்வதி ஆகும்.

கங்கை யமுனை சரஸ்வதி என்னும் நதிகள் சங்கமமாகிற விடத்துக்கு திரிவேணி சங்கமமென்று பெயர். அதுபோல் நாபியின்கண் மூன்று நாடிகளுங் கூடித் திரிவேணி சங்கமமுண்டு. இங்ஙனங் கூறிய

வாற்றால் பிரமாண்டம் யாவும் இத்தேகத்தின் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்பது பெறும்.

இத்தகைய பிண்டமாகிய சரீரத்துள் ஜீவான்மா வசித்தபோதிலும் அதின் அறிவு இச்சை தொழில் அந்தரியாமியாகிய பரமான்மாவை யின்றியமையாது. அவ்விறைவன் அவ்விடம் அநாதியே யிருத்தலால் இச்சரீரம் பிரமபுரமென்று உபசரிக்கப்பட்டது. ஆதலால் இச்சரீரம் பிரமபுரமாகவும் பரமான்மாவாகிய சிவம் பிரமமாகவுங் கொள்ளற்பாற்று.

இச்சரீரத்துள் தகரபுண்டரீக மென்னும் ஹிருதய கமல மொன்றுளது. அதன் தன்மையைக் கூறுவாம். அக்கமலம் பரமாகாயத்தில் சூக்குமமா யுள்ளதாதலால் பூதக்கண்ணாற் காணமுடியாது. இது பீஜ முதலாகக் கீழ்நோக்கித் தோன்றியதொரு திப்பிய கமலமாம். இக்கமலத்துக்குக் கீழ்க் கிழங்கு பிருதுவி தத்துவமாம். பெருவிரற் கனமுள்ள நாளம் அப்புமுதல் அந்தக்கரண மீறாகவுள்ள (23) தத்துவங்களாம். அந்நாளத்தின் உயரம் எட்டு அங்குலமுள்ளது. அதில் ஒன்பது துவாரங்களுள்ளன. அந்நாளத்தின் முடிவில் கீழ்நோக்கிய பொகுட்டிணையுடைய முடிச்சொன்று உளது. அதற்கு வித்தியாதத்துவம் ஏழும் சுத்தவித்தை யொன்றும் ஆக எட்டும் எட்டு இதழ்களாம். இவ்விதழ்களில் கிழக்கு முதல் ஈசானம் வரை "ஓம் சிவாய நமோ நம" என்னும் மந்திரம் விளங்கும். ஈசுரம் சாதாக்கியம் என்னும் இரண்டு தத்துவங்களும் 64 கேசர வடிவுகளாம். சத்தி தத்துவம் பொகுட்டு வடிவாம். சிவதத்துவம் பொகுட்டினுட் காணப்படும் பீஜ வடிவாம்.

மேற்கூறிய தளங்களுக்கு மேல் சூரியோதயத்துக்குச் சமானமாயும், பதினாறு தளங்கள் விளங்கப்பட்டதாயும் ஒருசாண் விஸ்தாரமுள்ளதுமான தாமரை நடுவில் நாலங்குல விஸ்தாரமுள்ள கர்ணிகை யொன் றிருக்கின்றது. இந்தக் கர்ணிகாக்கிரத்தில் சூரிய மண்டலமும், அதற்குள் சந்திர மண்டலமும், அதன் மத்தியில் அக்கினி மண்டலமும் அதன்மேல் சத்தி மண்டலமுமிருக்கின்றன.

முற்கூறியாங்கு முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாகக் கொண்டு அவற்றின் மேனிற்கும் முதல்வன் திருவடிகள் அவ்விதைய கமலத்தின் மேனிற்கும். அதனை யறிந்து பஞ்சாக்ஷரத்தால் பூஜை செய்க.

இதுகாறும் தகர புண்டரீகமாகிய ஹிருதய கமலத்தைப்பற்றி ஒரு சிறிது கூறினும். இனித் தகரபுண்டரீகத்துள் விளங்கும் ஆகா

யத்தைப்பற்றிப் பேசுவாம். ஹிருதய கமல மத்தியில் ஓர் (அம்பரம்) ஆகாயமுண்டு. அந்த அம்பரம் சித்தாதலினுல் அதற்குச் சிதம்பர மென்னும் நாமமுண்டாயிற்று. அதுபற்றி "சிதம்பரந்து ஹ்ருந் மத்யே" என்று தரிசனேப நிடதமுங் கூறுவதாயிற்று.

"உள்ளம் மன்றெனவும்" என்று தாயுமானவருங் கூறுவராயி னர். சித்சக்தி ரூபமாய் விளங்கும் இவ்வாகாயத்தைச் சரீரமாகவுடை யது பிரமம். ஆதலால் இவ்வாகாயமே பிரம்மமாகிய சிவத்துக்குப் பெய ராயிற்று. அதுபற்றி, "பிரமபுரமாகிய இச்சரீரத்துள் தகரமாகிய புண்டரீக வீட்டினுள் இருக்கும் ஆகாயத்தை நாடவேண்டியது" என்று சாந்தோக்கியமுங் கூறுவதாயிற்று. ஆகவே பிரமாண்டம் பிரம புரமாகவும், தில்லைவனம் புண்டரீக வீடாகவும், சிவம் ஆகாசமாகவும் கொள்ளல் வேண்டும்.

இந்தச் சிதம்பரத்தினிடத்தே சகல சராசரப் பொருளையும் இயக்கிப் பஞ்சகிருத்தியம் நடாத்துவான் வேண்டி இறைவன் அனவ ரதமும் ஆனந்த நிருத்தனஞ் செய்தருளுகின்றனர். ஆண்டு பிரமா முதலிய தேவர்கள் எல்லாரும் வழிபடுவராயினர். அதுபற்றி,

"வண்டுளப மணிமார்பன் புதல்வனேடு மனைவியொடுங் குடி புகுந்து வணங்கிப்போற்றும், புண்டரிக புரத்தினில் நாதாந்தமோன போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே" என்று ஆன்றோருங் கூறுவா ராயினர்.

இந்த ஞானமன்றமே ஓங்காரமாம். அதனுள் நடிப்பவனே நட ராஜனும். அதுபற்றி "ஓங்காரத்துட் பொருளை" என்றும் "உய்ய, என்னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற மெய்யா" என்றுங் கூறுவராயி னர்.

ஆகவே ஞானமன்று எனினும் ஓங்காரமெனினும் ஒன்றேயாம். ஞானமன்று என்பது திருச்சிற்றம்பலம். ஆகவே ஓங்காரம் திருச்சிற்றம்பலமாம். சிற்றம்பலமென்னும் ஞானமன்றத்தை "ஆனந் தத் தேனிருந்த பொந்து" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறி யருளினர்கள்.

### திருவாசகம்

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லா மென்னுடைய
பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரா
னந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

என்ற திருப்பாசுரத்தாற் காண்க.

தில்லை மரத்தின் விதை மஹாவிஷத்தை நீக்குமாறுபோல, அநாதியே நம்மைப்பந்தித்த சகசமலமாகிய மஹா விஷத்தைத் தகர புண்டரீக வீட்டினுள் "ஞானகாயம்" நீக்குமாதலால் அந்த ஞான மன்றம் "தில்லைத் திருச்சிற்றம்பலம்" என்று வழங்கப்படுவதாயிற்று.

மேற்கூறியாங்கு முப்பத்தாறு மாயாதத்துவ கமலபீடத்தினை வியாபித்து வித்தியா தேகமன்னி விளங்குஞ் சீலனைச் சீவான்மாகண்டு வழிபடும். அவ்வாறு வழிபடுதலால் வந்த மெய்ஞ்ஞானத்தால் ஒன்றன்றி இரண்டன்றி ஒன்றிரண்டுமன்றி நின்ற நிலையாகிய அத்துவித பாவனை செய்யும். அப்பாவனையால் சிவபெருமானைத் தன்னுள்ளே காணும். கண்டபின் எங்கும் வியாபித்து நின்றறியு மியல்பொடு கூடிய முற்றுணர்வு உறும். பின் பொருளுண்மை உணரும். மல வாசனை நீங்கும். நின்மல கேவல மெய்தும். அந்தமொன் றில்லா ஆனந்தமுறும்.

சேதனு சேதனப் பிரபஞ்சம் தோன்றி யொடுங்குதற்கும், முத்தான்மாக்கள் கறந்த பால் கன்னலொடு தேன் கலந்தாற்போலத் திளைத்து நின்று பூரணானந்த வாழ்வு எய்துதற்கும் இந்த ஞானமன்றமாகிய திருச்சிற்றம்பலமே இடமாதல் பற்றியும், இதனை ஆன்றோர் பொதுவெனக் கூறுவாராயினர். எத்தளிக்கும் மேலான தளியாதலினுல் இதனை ஆன்றோர் "கோயில்" என்று கூறுவாராயினர். ஆரியவேதம் தனக்கு முன்னும் பின்னும் காப்பாக ஓங்காரத்தை நிறுத்தி நடைபெறுவதுபோல, நமது சமயாசாரியர்கள் தமிழ் மறையின் முன்னும் பிரணவ உறையுளாகிய திருச்சிற்றம்பலத்தைவைக்கும் ஆணைதந் தருளினார்கள். அவ்வாறே நமது தமிழ்மறை ஓதுவார்கள் தேவாரம் ஓதுதற்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்னும் தெய்வத்திருமொழி கூறுதலை வழக்காற்றிற் கண்டாம். இனித் திருவாசகத்தில் "அந்தவிடைமருது" என்று கூறியிருத்தலைப்பற்றி ஒரு சிறிது பேசுவாம்.

"இடைமருது அல்லது மத்தியார்ச்சுனம்" (மத்தியம் = நடு; அர்ச்சுனம் வெண்மை, நின்மலம்) இது நின்மலமான ஸ்தானமெனப் பொருள்பட்டு மத்திய சப்தத்தோடு சேர்ந்து நின்று இத்தன்மையையுடைய ஆதிசக்தியின் ஹிருதய கமலம், மத்தியஸ்தானத்தை யுணர்த்திப்பின்பு அந்த ஹிருதய கமல மத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய ஸ்ரீ சோதிர்மய மஹாலிங்கப் பெருமானை யுணர்த்தி நின்றமைகாண்க.

"திருப்புடைமருதூர்" என்னும் வார்த்தையும் நன்கு இத்தருணத்தில் கவனிக்கத்தக்கது.

இத்காறுங் கூறியவாற்ருல் திருச்சிற்றம்பலமே பிரணவமாமென் பது, அல்லது பிரணவ உறையுள் என்பதுமாம்.

திருவாசகம்

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுள மன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினு னயடியேனணி கொடில்லை கண்டேனே.

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டு
முறவினெடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த்திருச்சிற்றம்பல மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

பால்வண்ண முதலியார்,
திருநெல்வேலி.

---

## வேதாந்தம்

வேதமானது ஈஸ்வரன் உலகத்தைச் சிருஷ்டிக்கச் சங்கற்பித்த பிரதி சிருஷ்டியிலும் முதலிலுண்டாக்கப்பட்ட புருஷனுக்கு உபதே சிக்கப்பட்டது. அவ்வாதி புருஷன் தனக்குப் பிந்திச் சிருஷ்டியான வர்களுக்கு உபதேசக்கிரமத்தில் இது வழங்கிவருவதாயிற்று. இவ் வேதம் அநாதியாகிய ஈஸ்வரனுல் வெளிப்பட்டமையின் அது அநாதி யெனவும் கூறுவதாயிற்று. இவ்வேதம் இன்னகாலத்தில் முதலில் வெளிப்படுத்தப்பட்டதெனத் தெரியாமையால், அநாதியெனினு மொக்கும். ஒரு அரசன் தன் தேசத்துக்குட்பட்ட மனிதர்களை ஆளும் விஷயத்தில் தமது ஆஞ்ஞையை அறிந்துகொள்ளும் பொருட்டு அவனுல் ஏற்படுத்தும் சட்டம்போல சகல உலகங்கட்கும் அரசனு கிய ஈஸ்வரன் தன்னுல் ஆளப்படும் சர்வமனிதர்களும் தமது ஆஞ் ஞையை யறிந்து நடந்துகொள்ள அவராலேற்படுத்திய சட்டமாம். இவ்வேதம் இவ்வளவென அளவிடுதற் கரிதாய் விஸ்தாரமாக விருந் தது. அது காலக்கிரமத்தில் வேதாத்தியனம் குறைவுபட்டுப் போயிற்று. வியாச முனிவர் தமது காலத்தில் எவ்வளவு வழங்கி யதோ அவற்றை அம்முனிவர் இருக்கு எஜுஸ் ஸாமம் அதர்வண மென்பதாகப் பிரித்துத் தமது சீடர்களுக் குபதேசித்தனர். இவ் வேதங்களில் அனேக சாகைகளுண்டு: ஒவ்வொரு சாகையில் முந்திய பாகம் யக்ஞ்யாதி நித்தியநைமித்திக கருமங்களையும், அவைகளையனுஷ் டிக்க வேண்டிய விதங்களையும், செய்யத் தக்க அதிகாரிகளையும், செய்

விக்கிறவர்களின் யோக்கியதையையும், ஆராதிக்க வேண்டிய தேவதை களையும், அத்தேவதைகளைப் பற்றிய மந்திரங்களையும், அந்தந்தக் கரு மங்களின் பயன்களையும், பின் அக்கரும சம்பந்தமான பல விஷயங் களையும் சொல்லுகிறது. அதனால் இது பூர்வகாண்டம் அல்லது கன்மகாண்டமெனப் பெயர்பெறும். பிந்திய பாகமானது ஈஸ்வரனை யுபாசிக்கும் மார்க்கமாகிய சாங்கியயோகம், நிஷ்காம கருமயோகம், தபசு, சகுண நிர்க்குணப் பிரம்மோபாசனுவிதி, ஆத்மலட்சணம், கருமசந்நியாசம், பக்தி, வைராக்கியம் முதலியவற்றைப் போதிக்கின்ற மையின், இப்பாகம் உத்தரகாண்டம் அல்லது ஞான காண்டமெனப் பெயர்பெறும். இதுவே வேதாந்தம்; வேதத்தின் முடிவு.

இவ்வேதாந்தத்தில் ஆன்மாக்களினுடைய கன்மானு சாரமாக அவர வர்கள் புத்தி யுக்தி சக்தி குணம் மனவுறுதி காலம் தேசம் முதலியவை கட்குத் தக்கதாக எவ்வெவர்க்கு எஃதெதில் பக்தி விசுவாசம் நம் பிக்கை பற்றுத லுண்டாகிறதோ அந்தந்த வகையைப் பின்பற்றி அவரவர்கள் மனதிற்குத் தக்கபடி யொவ்வொரு பலப்பிராப்தியை யடையும்படி பற்பல தேவதாந்தரங்களைக் கூறியிருக்கினும், பரிபக்குவ மடைந்த உத்தமர்கள் வழிபட்டு ஞானமடைவதற் கேதுவாகிய பர மேஸ்வர னென்றேயென வச்சிரலேபமாகத் தாபிக்கப்பட்டிருக்கிறது. அவ்வுண்மை அவ்வேதாந்தத்தின் உபக்கிரம உபசம்ஹார அப்பியாச வாக்கியங்களால் அறிந்து கொள்ளவேண்டும். அது வருமாறு:— வேதாந்த மென்பது நூற்றெட்டு உபநிஷத்துக்களாம். நூற்றெட்டே யென ஸ்ரீ இராமச்சந்திரர் கபிகுல சிரேஷ்டராகிய அனுமாருக்குச் சொன்ன யஜுர்வேத் முத்திகோப நிஷத்தும், மகாவாக்கிய இரத்தின வளியும் நிஷ்கரிஷை செய்துவிட்டன. உபநிஷத்து நூற்றெட்டினுள் முதலிலுள்ள ஈசாவாஸ்ய மென்னும் உபக்கிரமோப நிஷத்து "ஈசா வாஸ்யமிதம்ஸர்வம்" என்று சிவபெருமானுக்குரிய "ஈச" சப்தத்தில் உபக்கிரமஞ் செய்யப்பட்டிருக்கிறது. "சம்புரீசஃ பசுமதி:" எனும் அமரஸிம்ஹத்தால், "ஈச" சப்தம் சிவபெருமானுக்கே ரூடி நாம மாம். அன்றியும். "ஈஶாவாஸ்யாதி மந்த்ராங்யோஜபேத் நித்யம் மமாக்ரதா, மத்ஶாயுஜ்யமவாப் நோதிமம லோகேமஹீயதே" (ஈசா வாஸ்யம் முதலிய மந்திரங்களை எவனெனக் கெதிரிலிருந்து தினந் தோறும் ஜபிக்கின்றானோ, அவனெனதுலகில் பெருமை பெறுவதுந் தவிர எனது சாயுஜ்யத்தை யடைகிறான்) எனச் சிவபெருமான் இராமருக்குப் போதித்ததாகச் சிவகீதை பதினைந்தாவது அத்தியாயத்திற் காணப்படுகிறது. "ஈச" சப்தம் சங்கராச்சாரியர் கூறும் ஆன்மா

வுக்கேனும், இராமாநுஜரும் மத்துவரும்கூறும் நாராயணருக்கேனும் செல்லாது. உபநிஷத்துக்களில் பரமான்மாவை ஆன்மாவெனக் கூற லின், சங்கராச்சாரியர் "ஈச" சப்தத்திற்கு ஆன்மாவென்றது பொருந்து மெனின், அது பொருந்தாது. எங்ஙன மெனின்? "ஆத் மந்யே வாத்மாநம் பஶ்யத்" (ஆன்மாவிலே ஆன்மாவைக் காண்க) எனச் சாந்தோக்யோப நிஷத்தும் மற்றும் பல உபநிஷத்துக்களும் உபயான்மாவைக் குறிக்கின்றன. ஈண்டு ஆன்மாவிலே யென்றது ஜீவான்மாவை; ஆன்மாவை யென்றது பரமான்வை. உபநிஷதங்களில் பரமான்மாவை ஒவ்வோரிடங்களில் ஆன்மாவென்றது அங்காங்கிலட் சணே. இங்ஙனமாக, சங்கராசாரியருக்கு உபயான்மா உடன்பாடன்று; அவர் மதம் ஏகான்மவாதம். இவர் குறிக்கும் ஆன்மா இவர் கொள் கையின்படி இருபத்து நான்கு தத்துவங்களைக் கடந்தது. பரமான்மா முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து அங்காங்கி லட்சணையாற் கூறப் படும் ஆன்மாவாதலெங்ஙனம்? அன்றியும். "வாசுதேவோ பாராப்ர கிருதி" "ஜகத்விஷ்ணு" ப்ரகிருதி பரமோவிஷ்ணு" "யோநிஜ நார்தநா" "விஸ்வம் நாராயண" என்ற சுருதிகளின்படி நாராயணர் பிரகிருதி தத்துவத் தலைவராகலினானும், "ப்ரம்ம விஷ்ணுருத்ரேந்த் ராஸ்தேஸம் ப்ரஸூயந்தேஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் நாகா ரணனும்த்யர் தாகாரணந்துத்யேயஸ்ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச் வரச் சம்புராகாசமத்யே" (பிரமன் விண்டுருத்திரன் இந்திரனாகிய இவரெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்க ளோடு படைக்கப்படுகின்றன. ஆதலின் அவர்களும் அவைகளும் காரணமில்லை. தியாதாவாகிய அவர்களாலே தியானிக்கப்படும் தியேய னெனும் சருவைச்சுவரிய சம்பன்னனும் சருவேச்வரனும் சம்புசத்த வாச்சியனும் பரமாகாச மத்தியத்திலிருப்பவனுமான சிவனே கார ணன்) என அதர்வசிகோபநிஷத்து அறைதலினாலும் "ஈச" சப்தத் திற்கு நாராயணரைக் குறிப்பதற்கு மிடமில்லை. பாஞ்சராத்திரிகள் தங் கள் மூர்த்தியையும் ஈசுவரனெனச் சொல்லிக்கொள்ளுகிறார்களேயெ னின், அவர்கள் தங்கள் கோயிலை ஈஶ்வரன் கோயிலென அழைக்கக் கூசுவதென்ன? தாங்கள் ஈசுவர ஐயங்கார் எனப் பெயர்வைத்தழைத் துக் கொள்ளச் சம்மதியாத தென்னை? எனக்கடாவி மறுக்க. ஆகவே உபநிஷத்துக்களின் உபக்கிரமம் சிவபரமாகவே முடிந்தது.

இனி, முக்திகோப நிஷத்தென்னும் உபசம்ஹாரோப நிஷத்து "சதுர்விதா சயாமுக்திர் மதுபாஸநயாபவேத்" என்றும், "கைவல்ய முக்திரேகைவபாரமார்த்திக ரூபிணீ" என்றும், அதஸ்ஸர்வேஷாம்

கைவல்ய முக்திர்ஜ்ஞாநமார்க்கேண" என்றுங்கூறி, இறுதியத்தியா யத்தில் "ஊர்த்வபூர்ணமத: பூர்ணம் மத்யபூர்ணம் சிவாத்மகம்" என் பதனாலும், அந்த கைவல்ய முக்தி சிவோபாஸகர்டையுஞ் சாயுச்சிய மென்று கைவல்லியோப நிஷத்து முதலியவற்றில் பெறப்படுதலானும் உபநிஷத்துக்களின் உபசம்ஹாரம் சிவபரமாகவே முடிந்தது.

இனி, அப்பியாசமாவது இடையே நிகழும் வாக்கியம். இதே வாக்கியம் மற்றும் பல இடங்களி லெடுத்தாளப் படவேண்டும். அங் ஙனம் ஆளப்பட்டிருந்தால் தான் அப்பியாசம் நிலைபெறும். அது வருமாறு:—கைவல்ய முக்தியானது எந்த உபாயத்தினால் கிடைக்கிற தென்றாலோ முமுட்சுகளுக்கு முத்தியின் பொருட்டு மாண்டூக்கியோப நிஷத்து ஒன்றே போதும் எனவும், இம்மாண்டூக் யோபநிஷத்து நூற் றெட்டு உபநிஷத்தினுஞ் சிறந்ததெனவும் முத்திகோப நிஷத்தில் முடிவு செய்திருக்கிறது. இத்தகைய பிரதான மாண்டூக்யோப நிஷத் தின் இருதயத்தில் "ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவ மத்வைதம் சதுர்த்த மங்யந்தே" எனும் வாக்கியம் விளங்குகிறது. இதே வாக்கி யத்தை நிருஸிஹ்மபூர்வதாபிநி, உத்தரதாபிநி, நாரதபரிவிராஜகோபம், ராமோத்ரதாபிநி முதலிய உபநிஷத்துக்களில் எடுத்தாளப்பட்டிருக் கின்றது. நான்காவது (துரிய) தெய்வத்தைவிளக்கு நிமித்தம் "சதுர்த் தம்" என்னும் வாக்கியத்தோடு வெளிப்படும் இவ்வசனங்கடோறு மிருக்கும் தெய்வம், "சிவம்" என்பதன்றிவேறு தெய்வப்பெயர்களி லொன்று மெடுத்தாளப்படவில்லை. இராமாநுஜர் ஈண்டுக் குறித்த "சிவம்" என்பதற்கு மங்கள சொரூபனெனக்கூறி அப்பெயரை நாரா யணன்மே லேற்றியும் சதுர்த்த மென்பதற்குச் சங்கர்ஷண, பிரத்யும்ந. அநிருத்தரென மூவர்க்கும் லயஸ்தானமான வாசுதேவனென்றும் பொருள் கொண்டனர். "அத்வைதம் சதுர்த்தம் பிரஹ்ம விஷ்ணு ருத்ராதீ மேகமாசாஸ்யம் பகவந்தக்சிவம்" (அந்நான்காந் தெய்வம் பிர மன் விஷ்ணு உருத்திரனென்னும் மூவரின்மேன்பட்டசிவம்) எனப்பஸ் மஜாபாலவசனம் இனிது விளக்கினமையின், இராமாநுஜர் அர்த்தம் அனர்த்தமாம். அன்றியும், "நஜாயதேம்ரியயதே" (ஜீவனுக்கு உற் பத்தி நாசங்களில்லை) என்ற வேதவசனத்திற்கு முரணாக வாசுதேவ னிடத்திலிருந்து சங்கர்ஷணன் உண்டாயினனென்றும், அவர்ஜீவனென் றும், ப்ரத்யும்நன் மனனென்றும், அநிருத்தன் அகங்காரனென்றும் பாஞ்சராத்திரம் கூறலின், இவர்களை மும்மூர்த்தி ஸ்தானத்தில் வைத்த இராமாநுஜர் கொள்கை அஸமஞ்ஜஸமாம். ஆகவே உபநிஷத் துக்களின் அப்பியாச வாக்கியங்களும் சிவபரமாகவே முடிந்தன.

இவை முதலிய பலிஷ்ட பிரமாணங்களால் உபநிஷத்துக்களின் உபக்கிரம, உபசம்ஹார அப்பியாச நியாயப்படி நூற்றெட்டு உபநிஷத்துக்களாகிய வேதாந்தத்தில் உள்ள பொருள் சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவர்கள் கொண்டாடும் சிவபெருமானே யென்பது ஸர்வஸம்பிரதி பந்நமாம்.

மணவழகு.

---

## இருமணி

### (சத்தும் சதசத்தும்)

> "எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்தும்
> தானேயாகிய தயாபரன் எம்மிறை."

முன்வாசகத்தில் (கடவுளும் உலகும்) குறித்துள்ள இரண்டு திருமந்திரங்களின் பொருளை விளக்கப் புகுவாம். இவ்விருமந்திரங்களும் ஒருவாறு ஒன்றாகத் தோற்றுவதால், யூகித்துணராவிடின், அவைகளின் பொருள் கெட்டுவிடும்.

> பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
> பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்
> தன்னை மறைத்தது தன்கா ரணங்களாம்
> தன்னின் மறைந்தது தன்கா ரணங்களே.

> உ
> மரத்தை மறைத்தது மாமத யானை
> மரத்தின் மறைந்தது மாமத யானை
> பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
> பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

இம்மந்திரங்கள் உயிரின் பந்தமோட்சநிலைகளை யுணர்த்தி, அது தத்துவ தரிசனம், ஆத்மதரிசனம், சிவதரிசனம் ஆகிய முத்தியேணியில் ஏறிச்செல்வதை விளக்கும். முதன் மந்திரத்தில் பார்ப்பவன் கண்ணுக்குப் புலப்படுவது ஒரு பொன் அணி. இதில் இருவகைக் காட்சியுளது. அதைப் பொன்னாகவாவது அல்லது அணியாகவாவது நோக்கலாம். பொன்னாக நோக்குங்கால், அதன்நிறம், மாற்று, இடை முதலியவை முன்னுக்கு முனைத்து நிற்கும். அப்பொழுது அது அணியென நமக்குத் தோற்றாது. அதுபோலவே, அதை அணியாக நோக்குங்கால் அது காதணியோ, கழுத்தணியோ, கையணியோ, கால் அணியோ வென்பன முனைத்து நின்று அது இன்னவிதமான பொன் என

மன்த்தில் வராது. ஆயின் இவ்விருவிதக்காட்சி நிகழுங்காலத்திலும், பொன்னவது, அணியாவது, பார்ப்பவனவது உளதாகாமற்போக வில்லை. அவைகளை மித்தையென்றும் பொய்யென்றும் சொல்லுவதற் கிடமில்லை, அவசியமுமில்லை. பொருள் ஒன்றாயிருந்தும் காட்சி பேதத் தால் வேறாகின்றதன்றி நாம் எவ்விதத்தினும் மருண்டதில்லை. ஒரு பொருள் இருகாட்சியுடைத்தாயிருப்பதில், நம்முடைய மனமும் ஒரு காட்சியினின்றும் மற்றொரு காட்சிக்கு மாறும் இயல்புடையதாயிருக் கின்றது. இவ்விருகாட்சியினும் பயனுண்டு. ஒருவன் ஒரு நகை வாங்கவேண்டுமென்று ஒருநகை வியாபாரியின் கடைக்குச்சென்று நகை யைப் பரிட்சிக்குங்கால் அவன், பொன்னும், நகையும் நாமரூபமாத் திரந்தானே, அவையெல்லாம் மித்தைதானே யென்று திடங்கொண்டு பேரம் செய்வானானல் அவன் மோசம் போகானே! ஒருவன் தனக்கு என்ன மாற்றுத்தங்கத்தில் என்ன நகை வேண்டுமென்று நிச்சயஞ் செய்துகொண்டு, வியாபாரி கொடுக்கும் நகை தான் கோரும் மாற்றிலி ருக்கிறதாவென்று பார்த்து, பார்த்து, பிறகு தனக்குப்பிடித்தமான நகையா வென்றும் சோதிப்பான். இவ்வுதாரணத்தை மேற்கொண்டு, திருமூலநாயனாரும், உயிர்க்கும் உடலுக்கும் (Subject and Object) உள்ள இயைபினை உணர்த்தப்புகுந்தார். 'தன்' என்னும் பதம் உயிர், சீவன், பசு, ஆன்மா என்னும் பரியாயபதங்களால் உணர்த்தப்படும் புருஷனை உணர்த்தி நின்றது. 'தன்கரணங்களாம்' என்றதனாலும் இதன் பொருள் மேலும் நிலையுறுத்தப்பட்டது. அப்படிக்கன்றி 'தன்' என்னும் மொழி மாயாவாதிகள் கூறுவதுபோல் பரம்பொருளை யுணர்ந் தாது. 'தன் கரணங்களுக்கு' மேல் நின்றது அவர்கள் மதப்படி பர மானதால் அவர்களும் இப்பொருள் கூறி இடர்ப்பட்டார்கள். இப்படித் தப்பர்த்தம் செய்யக்கூடுமென்று எண்ணியே, நம் நாயனாரும், "மரத் தை மறைத்தது" என்று எடுத்துப் பின்னும் அருளிச் செய்தார். 'உயிர் உடல்' (Mind and Body) என்ற முன்னொரு வியாசத்தில், நம் நாயனார் கருத்தின்படி இவற்றிற்குள்ள சம்பந்தம் இன்னதென விளக்கினம். அதுவும், உயிர் உடலுக்கு இதம்தரக்கூடிய பொருளை யும் செயலையும் நாடி அவ்வுடலுக்கே உழைத்து உலகோடு விஷயீக ரித்து நிற்கையில், தன் உயிரும் உலகோடொன்றாகி, தான்கெட்டு நிற் கின்றான், மறைந்துகிடக்கின்றான். நம் நாயனாரின் சொற்கூற்றைக் கவனிக்க ஒவ்வொருசமயமும், இதுவெல்லாம் மித்தை மித்தை யென்று மொழியவில்லை. 'மறைத்தது' 'மறைந்தது' என்றே மொழிந்தார். உயிராவது உடலுலகாவது மித்தையன்று, பொய்யன்று. உயிர் உட

லோடு ஒற்றி விஷயீகரித்து நின்றபோது (Objective condition) உயிர் உடலினுல் (Object) மறைக்கப்பட்டது. உயிரும் உலகை மறைத்து உலகோடுஒற்றி நில்லாதபோது, உலகு மித்தையானதில்லே. உயிரில் மறைந்தே நின்றது. இழந்து நின்றது. சிலமந்தமதிகள் இவையெல்லாம் சொல்வாத மென்பர்கள். ஆயின், ஒவ்வொரு மொழியும் ஒரே பொருளில் உபயோகிக்க வேண்டுமென்னும் தர்க்க நியாயத்தைக் கைப்பற்றி, ஒவ்வொரு மொழியையும் சரியாகப் பிரயோகிக்க வேண்டியது அவசியமன்ருே? இவ்விதமாக மொழிகளேச் சரியான பொருளில் உபயோகப்படுத்தாமல் மயக்கம் கொள்ளும்படி கூறுவதனுலன்ருே அநேக துர்விவாதங்களும் தலையெடுத்தன. இதுநிற்க. இவ்விதமாக உயிர் உடலோடு ஒற்றி மறைந்து கிடக்கும் நிலைக்கு அதன் பந்தநிலே அல்லது பாசபசுநிலே யென்றுபேர். உயிரை மறைத்து நிற்பதற்குப் பந்தமென்றும் பாசமென்றும் மலமென்றும் அவித்தை யென்றும் பேர். தன்னேயும் உலகையும் வேறுபடுத்தி, இவ்விரண்டின் உண்மைச் சொருபத்தை உணர்ந்து, தான் உலகல்ல வென்று தன் சொரூபத்தில் நிலேக்கும்போது, உயிர் தத்துவ தரிசனத்தையும் ஆன்மதரிசனத்தையும் அடைந்ததாகும். (இவைகளின் விவரங்களே உண்மைநெறி விளக்கத்திலும், சித்தாந்தத்தில் வெளிவந்த 'திரிபதார்த்த தசகாரியத்திலும்' பார்க்கவும்). இவ்வுண்மையுணர்வினுல், உண்மை நீதிபோதம் (Ethics) முற்றும் விரிக்கின்றது. ஒருவன், உலகாசையில் முழுகி நிற்கவும், தன் அறிவு இச்சையெல்லாம் மழுங்கி, தீயசெயல் களைச்செய்து, துன்பத்தில் ஆழ்கிருன். இவ்வுலகப் பற்றினின்றும் விடுபடவும், தானும் துயரினின்று விடுபட்டு, தன்மேலான குணங்களேயும், அறிவையும் விளக்கிப் பழக்கத்திஞல், ஆன்மசுத்தி அடைகிருன். இவ்விதமாவதும், உயிரின் ஒரு முக்கிய தன்மையாகிய அதுவது ஆதல் தன்மையால் உண்டாகியதென்று முன் வியாசத்திலேயே விரித்துள்ளோம். நாம் கண்டமட்டும், இவ்விரிவும், சைவசித்தாந்த நூல்களிற் கண்டதன்றி, மற்றெந்த மதவாதிகள் நூல்களினும் விரிக்கக் கண்டிலேம். இத்தன்மையினுல், இதுசத்தும், அசத்தும் ஆகாமல் நடுவே நின்று சதசத்தென்று பேர்பெறுகின்றது.

இத்தன்மையை, ஆணும் பெண்ணும் அல்லாத அலியென்று ஆன்மாவை "ஒழிவிலொடுக்கம்" என்னும் அரிய நூலில் கண்ணுடைய வள்ளலார் கூறுகின்ருர். அலியெனினும், அதன் பாலேக் கூறும்போது, ஆணுறுப்பு மிகுந்தால் ஆணுகும், பெண்ணுறுப்பு மிகுந்தால் பெண்ணுகுமென்று தமிழ் இலக்கணம் கூறும். ஆகையால், அலி

யாகிய ஒருவள் 'அவன்' என்ருவது 'அவள்' என்ருவது அழைக்கப் படுமன்றி, 'அது' என அழைக்கப்படரன். அதுபோலவே, உயிரும், அசத்தாகவாவது, சத்தாகவாவது நிலைபெற்று வாழுமன்றி, தனித்து வாழாது. அதாவது, இவ்விரு பொருளுடன் பற்றி நில்லாது தானுகத் தனித்து நில்லாது. கடவுளாவது உலகமாவது இல்லாவிடில், உயிர் என்ற ஒரு பொருளே இருக்கமாட்டாது. ஆகையினுல் நம் மெய்கண்ட நாதனும் இந்நிலையை இரண்டு உதாரண முகத்தால் விளக்குகின்ருர். அவையாவன ஊசலும் (ஊஞ்சல்) சிறைசெய் நீருமாம். ஊஞ்சல் கயிற்றினுல் ஒன்றில் கட்டியிருக்க வேண்டும். வடம் அற்ருல் பூமி யில்தான் விழவேண்டும். ஆகாயத்தில் தனித்து நில்லாது. ஒரு ஏரியில் கட்டுண்ட நீரும், கரையுடைந்த வழி அங்கு நில்லாது வேறு புலத்து விரைந்து செல்லும். முற்கூறிய உதாரணத்தை முன்னிட்டு நம் நாதர் 'அத்திப்பழம் ஏன் கீழே விழுகின்றது' என்னும் கேள்வி யின் பொருளை உணர்ந்திருந்தாரென்று வெளியாகிறது. மரத்தின் பலத்தால் தாங்கப்பெற்று அதன் ஆதரவால் ஊஞ்சல் மேல் நின்றது. அதன் வலிவு குன்றியவழி, இன்னெரு சத்தியால், பூமியின் ஆகரு ஷண சக்தி (Force of Gravity)யால் இழுக்கப்பட்டு பூமியில் சேருகின்றது. இவ்விரண்டு சக்தியின் ஊஞ்சல் இடைப்பட்டு நின் றது. எனினும், அதுமரம் அல்லது பூமியுடன் இயைந்தே நிற்க வேண்டும். பூமியின் ஆபாரசத்தியால் இழுக்கப்பட்டும், மரத்துடன் கொஞ்சகாலம் சேர்ந்து நின்றது கொஞ்சகாலம் மட்டுந்தான், மரத் தின் கொம்பில் பழம் பழுத்தவுடன் கொம்பு எவ்வளவு இழுத்தாலும் பழம் நில்லாது, மண்ணுடன் சேர்ந்து மண்ணுய்விடும். அற்றதும் பூமியைப்பற்றியதும் ஒரே சமயம். அதுபோலவே பாசங் கழன்ருல் பசுவுக்கிடம்பதியாம்.

ஜே. யம். நல்லசாமி பிள்ளை, B. A., B. L.

---

## கிரியாமார்க்கம்

மானுடப் பிறப்பெடுத்து, முன்செய்த புண்ணிய வசத்தால் சற் சமயமாகிய சைவசமயத்தை அனுட்டிக்கும் பெரும்பேறு வாய்க்கப் பெற்ற ஆன்மாக்கள் கடைத்தேறுதற்குரிய சோபானக்கிரமம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுமாம் என்பது சித்தாந்த நூற்றுணிபு.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவகையால் வேண்டப்படும் ஒழுக்கங்களிற் சிறந்து, அதன் பின்னர் சைவசமயத்துக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்கள் அமைந்து, சிவநேசம் உடையராய், திருக்கோயில் அலகிடல், மெழுகல், திருநந்தவனம் வைத்தல், மலர்பறித்தல், பூமாலை கட்டுதல் முதலிய சிவகைங்கரியங்களைச் செய்வோர் சிவநாட்டம் பெரிதும் வளரப்பெறுவர். இவர்கள் தமது உடலைச் சிவபணிக்கு அர்ப்பணம் செய்து அங்ஙனம் செய்யு முகத்தால் தமது உடற் செயல் வாயிலாகச் சிவனைத் தரிசித்தலின், இவர்களது தரிசனம் படர்க்கைத் தரிசனம் எனப்படும். இதுவே சரியா மார்க்கம் எனப்படும்.

இந்தச்சரியை வாயிலாகச் சிவனைப் புறப்புறமாகக் கண்டு, அக் காட்சியின் முதிர்ச்சியுற்றூர், தம்மிடத்தே முன்னிருந்த சிவநாட்டம் பின்னும் ஒரு மடங்கு விருத்திபெற்றுச் சிவகர்மமுடையராகி அந்தச் சிவனை முன்னிலைப்படுத்திப் பூசித்தலாகிய சிவார்ச்சனை முதலிய பணிகளில் நிற்பர். இவர்கள் சிவனைத் தரிசிக்கும் தரிசனம் முன் னிலைத் தரிசனம் எனப்படும். இந்தத் தரிசனம் சிவனைத் தமக்குப் புறத்தே காணும் தரிசனமாதலின் புறத்தரிசனம் எனவும்படும்.

இந்த முன்னிலைத் தரிசனத்தினும் முதிர்ச்சியுற்றுத் தம்மிடத் துள்ள சிவநாட்டம் பின்னுந் தடிக்கப்பெற்றூர் சிவனைத் தம்முட் காண் டற்குரியதாகிய யோகத்தைச் சாதித்து, அந்தச் சாதனை வாயிலாக அப்பெருமானைத் தமது இருதய கமலத்தின் வைத்துக் காண்பதாகிய தன்மைத்தரிசனம் கைவரப் பெறுவர்.

இந்தத் தரிசனத்தால் இவர்கள் சிவனைத் தம்முன்னே காண்பா ராயினும், தம்மை அவரின் வேறெனத் துவித பாவனை பண்ணுவதால் இத்தரிசனம் அகப்புறத் தரிசனம் என்னப்படும்.

இந்தத் தன்மைத் தரிசனத்தினும் முதிர்ச்சியுற்று, தமது செய லிறந்து, அங்ஙனம் செயலிறத்தல் காரணமாக மனமும் இறந்து, சிவத்தைத் தம்மின் வேறுகாத அத்துவிதப் பொருள் எனக்கண்டு சிவானந்தத்தின் முழுகுவோர், தன்மை முன்னிலை படர்க்கை எனும் இடவேறுபாடுகள் சிறிதும் இன்றி எல்லாம் சிவமாகத் தோன்றும் ஆனந்தத்தை அனுபவிப்பார். இதுவே உண்மைத் தரிசனமாதலின் இது அகத்தரிசனம் எனப்படும். இந்தத் தரிசனம் முதிரும் இடத்து இதற்குத் தரிசனம் என்னும் பெயர்தானும் அமைவது கூடாதாகும். இது மனவாக்கிறந்த அனுபவமாகும்.

இறுதிக்கண் நிற்பனவாகிய யோக ஞானங்களுக்கு வழிகாட்டிகளாகவுள்ளன முதற்கண் நிற்பனவாகிய சரியை கிரியைகளாதலாலும், யோக ஞானங்களை அனுட்டித்தற்குரிய பக்குவம் மிகச் சிலர்க்கன்றி இல்லாமையானும், சரியை கிரியைகளை அனுட்டித்தல் சைவ சமயிகள் சகலருக்கும் இன்றியமையாது வேண்டப்படும் சாதனமாகும்.

நாம் மனத்தாற் கடவுளை வணங்குதற்கெல்லாம் காயத்தால் அவரைச் சேவித்தல் பெருந் துணையாகுமாதலால், காயத்தாற் செய்யப்படுவனவாகிய சரியை கிரியைகளைச் சமய சாத்திரங்கள் சொல்லும் நெறியில் நின்று கிரமந்தவறாது அனுட்டிப்பது எமக்குப் பெரிதும் வேண்டப்படும். மனத்தை ஒடுக்கிக் கடவுளிடத்தே ஒடுக்குதற்கு எல்லாரும் பக்குவர் அல்லர் ஆதலாலும், இங்ஙனம் ஒடுக்குதற்கு எம்மிடத்தே சிவநாட்டம் பெரிதும் வேண்டப்படுமாதலாலும், இந்தச் சிவ நாட்டம் நாம் எமது காயத்தைச் சிவப்பணியிற் செலுத்துவதால் எம்மிடத்தே மிக எளிதில் வந்து சித்திக்குமாதலாலும், சரியை கிரியைகளை எல்லாம் நாம் தப்பாது அனுட்டித்தல் வேண்டும். இந்த உண்மையை அறியாத இக்காலத்துள்ள நவீனவிவேகிகள் சிலர் சரியை கிரியைகளை ஏளனம் செய்வர்.

சீவர்கள் எல்லாம் உலகத்திற் சேட்டையுற்று அந்தச் சேட்டை காரணமாக, தம்மைச் சேட்டிப்பிக்கும் திருவருளை அனுபவித்து, அவ்வனுபவங் காரணமாகவே அவர்கள் எல்லாம் படிமுறையாக ஏற்றமுறுதல் வேண்டும் என்பது கடவுளுடைய பஞ்சகிருத்திய பிரயோசனத்தை நுணுகி ஆராய்வார்க்கு இனிது புலப்படும். ஆகவே சீவர்கள் எல்லாம் சேட்டையுறுதலாகிய செயன்முறை அவர்களுக்கு அத்தியாவசியமாக வேண்டப்படும் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும். கீழ்ப்படிக்கணுள்ள சீவர்கள் செயன்முறை பற்றியே விருத்திபெற்று, அங்ஙனம் விருத்திபெற்ற பின்னரே அவர்கள் கடவுளை அறிவினும், அதன்பின்னைத் தமது உணர்விலும் காணவல்லவராவர். இந்தக் கிரமத்தால் நாம் எல்லாம் தாவரதோற்றங்களும் மிருகதோற்றங்களும் படிமுறையாக அடையும் விருத்திகொண்டு இன்றறியலாம். இந்த விருத்திக்கிரமத்தை எமது சமயசாத்திரங்கள் ஆன்மதத்துவம் பற்றி அடையும் விருத்தி, வித்தியாதத்துவம்பற்றி அடையும்விருத்தி, சிவதத்துவம்பற்றி அடையும்விருத்தி என்றுமூன்றுவகையின் வைத்து விளக்கும். ஆன்மதத்துவம்பற்றி அடையும் விருத்தியே ஆன்மாக்கள் எல்லாம் தங்கள் காயத்தாற் செய்யும் செயன்முறைபற்றி அடையும் விருத்தி எனப்படுவது.

இந்தச்செயன்முறைகள் தம்முள்ளும், நல்வினைகளைச் செய்வதால் ஆன்மாக்களுக்கு விருத்திபெரிதும் உண்டாகும். நல்வினைகளிலே சிவசத்தி அதிட்டானம் மிகப்பெரிதாகையினாலே, எந்தநல் வினைகளைச் செய்வோர் எல்லாம் அந்தச்சிவ சத்தியை அதிகமாக அனுபவித்து, அவ்வனுபவங்காரணமாக அதிகமான விருத்தியைப்பெறுவர்.

நல்வினைகள் தம்மினும், சிவனை முன்னிலைப்படுத்தி அவருடைய திருவடிகளுக்கு நாம் செய்யும் கிரியைகளிலே சிவசத்தி அதிட்டானம் பின்னும் அதிகமாக உண்டு ஆதலால், எமக்குச் சிவார்ச்சனை முதலிய கிரியைகளும் அவற்றிற்கேதுவாகிய சரியைகளும் நல்வினைகளினும் அநந்த மடங்கு அதிகமாகிய பயனைத்தருவனவாகும்.

எமது சமயக்கிரியைகள் எல்லாம் பலதத்துவார்த்தங்களைக் குறிப்பாய் விளக்கி, எமது அந்தக்கரணங்களிலே அந்தத் தத்துவார்த்தங்களின் பயனை அபுத்திபூர்வமாகவும் பதியச்செய்து, அங்ஙனம் பதியும் பயிற்சி வசத்தால், காலாந்தரத்திலே அந்தத்தத்துவக் கிரமங்களை நாம் எல்லாம் அனுபவத்தில் அறிதற்குரிய சிறந்தசாதனங்களாகும். அந்தக்கிரியைகள் எல்லாம் அதிரகசியமாகிய அந்தரங்கத்துறைகளுக்கு அறிகுறிகளாகப் பரமஞானமாகிய இறைவனால் அமைக்கப்பட்டுள்ளனவாம். ஆகவே அந்தக்கிரியைகளைச் சமயங்கற்பித்தவாறு சற்குருமுகத்துப் பெற்றுச் சிறிதும் வழுவாது எம்மால் அனுட்டிக்கற்பாலனவாகும். உபாத்தியாயரிடத்துக் கிரமமாகப் பாடங்கேட்டு அந்தப்பாடத்தை அவர் சொல்லிய முறைப்படி நாம் கிரமமாக அப்பியாசஞ் செய்தாலன்றி அந்தப்பாடத்தால் எமக்குச் சிறிதாவது ஒருபயன் வாய்க்கமாட்டாது. சமயக்கிரியைகள் லௌகிகபாடங்களினும் பெரிதும் விசேடமுடையனவும் அதி அந்தரங்கமானவுமாம். ஆதலால், நாம் எமது மனம்சென்றவாறு அவற்றை எடுத்தாளாது கிரமவழிநின்று அவற்றை அனுசரித்தல் ஒருதலையான் வேண்டப்படும் என்க.

ச. சபாரத்தின முதலியார்,
யாழ்ப்பாணம்.

---

## கடவுள் உயிர்களுக்குக் "காட்டிக் காண்பவர்"

ஆன்மாக்கள் பாரதந்திர முடையனவாதலால், அவை தமக்குப் பற்றுக்கோடாகவுள்ள கடவுள் ஒன்றைக் காட்டினாலன்றித் தாமாக யாதொன்றையுங் காணமாட்டா. இங்ஙனங் காட்டுதன்மாத்திரையால் தான் அவ்வான்மாக்கள் பொருள்களைக் காண வல்லுனவோவென்று நுணுகி ஆராய்வா மெனின், அதுதானுங் கூடாதென்பது இனிது

புலப்படும். கடவுள் காட்டுமிடத்து ஆன்மாக்கள் பொருள்களைக் காண்கிறபவாமெனின், காணுந் தொழிலளவிலே அவ்வான்மாக்கட்குச் சுவதந்திரம் உண்டென்ருய்விடும். ஆன்மாக்களுக்குச் சுவதந்திரம் எவ்வாற்ருனு மில்லையாதலால், அவைகள் காணுவதும் தம்மோடு கடவுள் உடங்கியைந்து நின்று கண்டாலன்றி அமையாது. ஆகவே ஆன்மாக்களுக்குப் பொருள்களைக் காட்டி, அங்ஙனங் காட்டிய பொருள்களைக் காணுமாறு அவ்வான்மாக்களோடு உடங்கியைந்து கடவுளுங் காண்பர் என்று சைவசித்தாந்த சாஸ்திரங்கள் நுணுக்கமுற எடுத்து விளக்கும். இது எதுபோல எனின், கண்ணொளியும் ஆன்மபோதமும் போல. ஆன்மபோதம் கண்ணொளிக்கு யாதொரு பொருளைக் காட்டினலன்றி அக்கண்ணொளி அப்பொருளைக் காணமாட்டாது. அது மட்டோ? ஆன்மபோதம் அக்கண்ணொளியோடு கலந்து தானும் அப்பொருளைக் கண்டாலன்றிக் கண்ணொளி அப்பொருளைக் காணமாட்டாது. ஆகவே காட்டலும் காண்டலுமாகிய இரண்டு செயலும் ஆன்மாக்களைப் பிரேரிக்குமிடத்துக் கடவுள் பாலுண்டென்பது செவ்விதிற் போந்திடும். இவற்றுட் காட்டலாவது ஆன்மாக்களை அநுபவ நுகர்ச்சியின் கண் ஏவுதல். காண்டலாவது அவ்வேவுதல் காரணமாகப் பெறப்படும் அனுபவத்தை அனுப்விக்கச்செய்தல். ஒன்று புறச்செயலாக மற்றையது அகச்செயல் எனப்படும். இவ்விரண்டு செயல்களாலும், கடவுள் கலப்பினுல் ஆன்மாக்களோடு ஒன்ருதலும், பொருட்டன்மையால் வேருதலுமாகிய அத்துவித சம்பந்தம் இனிது பெறப்படுதல் காண்க.

கடவுளும் உலகப் பொருள்களைக் காண்பராமாயின், அவரும் ஆன்மாக்களைப்போல மலபந்தராய் மதிக்கப்படுவரன்றே எனின், உலகப் பொருள்களை ஆன்மாக்கள் காண்பதும் கடவுள் காண்பதுமாகிய இரண்டும் தம்முட் பெரிதும் வேற்றுமைப்படுமாதலின், அக்காட்சிபற்றிக் கடவுள் மலசம்பந்தர் எனப்படுமாறில்லை என்க. ஆன்மாக்கள் உலகப்பொருள்களைக் காண்பதெல்லாம் தம்மைப் பந்தித்துள்ள மலத்தினது சேட்டை காரணமாகவாம். கடவுள் அவற்றைக் காண்பது ஆன்மாக்களைப் பந்தித்துள்ள அந்த மலத்தின் வலத்தை ஒழித்தற் பொருட்டாகவாம். ஒன்று மலத்தின் செயலாக மற்றையது அருளின் செயலாமாதலின் அவ்விரண்டும் தம்முட் பெரிதும் பேதமுற்றிடுமென்க.

ஆன்மாக்கள் உலகப் பொருள்களைக் காண்பதெல்லாம் அவற்றைக் கடவுள் காண்டல்பற்றி என்று முன்னர்ச் சொல்லிவிட்டுப் பின்னர் அவற்றை மலத்தின் செயல் என்று சொல்வது பொருந்துமாறு எங்ஙனம் என்பீராயின், கடவுள் அவற்றைக் காட்டுவதெல்லாம் ஆன்மாக்களைப் பந்தித்துள்ள மலத்தளவாகவேயாகும். ஆன்மாக்கள் தம்மைப்பந்தித்துள்ள மலபந்தத்தளவாக எந்தெந்தப் பொருளைக் காணுந் தகுதி யுடையனவோ, அந்தந்தப் பொருளை அவ்வான்மாக்களுக்குக்

கடவுள் காட்டுவர். கடவுள் காட்டாக்கால் ஆன்மாக்கள் அந்தப் பொருள்களைக் காணுமாறில்லை. ஆன்மாக்களைப் பந்தித்துள்ள மலந் தானும் அவற்றுக்கு அந்தப் பொருள்களைக் காட்டுமாறுமில்லை.

இஃதொக்குமாயினும், கடவுளே ஆன்மாக்களுக்கு உலகப் பொருள்களை எல்லாம் காட்டிவிட்டு, அத்தோடமையாது, அவ்வான்மாக்கள் அப்பொருள்களைக் காணுமாறு தாமும் அவற்றோடு உடங்கியைந்து நின்று கண்டுவிட்டு, பின்னர் அக்காட்சிபற்றி அவர் ஆன்மாக்களைத் தண்டிப்பது நீதியாகுமோ என்பீராயின், இந்த ஆட்சேபத்துக்கு நாம் பல முறையும் சமாதானங் கூறியிருக்கின்றோம். கடவுள் ஆன்மாக்களுக்கு உலகப்பொருள்களைக் காட்டுவதெல்லாம், அவ்வான்மாக்களைப் பந்தித்துள்ள மலபந்தத்தளவாகவாம். ஆகவே கடவுள் அங்ஙனம் காட்டுதற்குக் காரணம் அந்த மல பந்தமன்றிக் கடவுளுடைய விருப்பன்று. அந்த மலபந்தத்தைப் படிமுறையாக ஒழித்தற்பொருட்டே கடவுள் உலகப்பொருள்களை ஆன்மாக்களுக்குக் காட்டி, அக்காட்சி காரணமாகப் பெறப்படும் பயனை அருத்தி, உண்மையைப் புலப்படுத்துவர். வைத்தியன் நோயளவுக்கேற்ற மருந்தைக் கொடுக்குமிடத்து, அந்த மருந்தைக் கொடுத்தமைக்குக் காரணம் நோயேயன்றி வைத்தியனல்லன். இதுபோலவே கடவுள் செயலுமாமென்க. கடவுள் மலநோய்க்கு மருந்தைக்கொடுத்து, கொடுத்தன் மாத்திரையோடமையாது அம்மருந்தை நோயாளராகிய ஆன்மாக்கள் அருந்துமாறும் செய்து நின்று உபகரிப்பாராதலின், அவருடைய பெருங்கருணைத்திறம் இனிது புலப்பட்டு நிற்கும் என்க.

---

## கடவுள் வேண்டுவார் வேண்டியவாறீபவர்

ஆன்மாக்களாகிய தமது புதல்வர் எது எதை விரும்புகின்றார்களோ அது அதைப் பிரசாதித்தருளுதல் எமது தந்தையாராகிய கடவுளுடைய திருவருட் குணமாம். ஒரு பிதா தனது மழவிளங் குழவி எது எதை விரும்பிற்றோ அது அதை எவ்வாற்றானுந் தேடி அந்தப் பிள்ளைக்குக் கொடுத்து அதனை உவப்பித்தல்போல, எமது பரமபிதாவாகிய சிவபெருமானும் நாம் விரும்பிய போகங்களை யெல்லாம் எமக்கு ஊட்டி எம்மை உவப்பிப்பர். ஆனால், பிதா பிள்ளைக்கு அது விரும்பிய பொருளைத் தேடிக்கொடுத்து அதனை உவப்பிக்குமிடத்து அப்பிள்ளை அப்போது உவப்புறுதலாகிய அந்த ஒரு பயனை மாத்திரமன்றிப் பின்னர் வரக்கடவதாகிய பயனை நோக்குவதில்லை. கடவுள் பின்னுக்கு விளைதற்குரிய பயனையும் நோக்கியே அவர் விரும்பிய போகங்களை ஊட்டுவர். இங்ஙனமாயின் பின்னுக்குக் கேடு விளைத்தற்குரியதொரு போகத்தை ஆன்மாக்கள் விரும்பும்போது கடவுள் ஊட்டுதல் அவருடைய காருண்ணிய முறையாகுமோ எனின், ஆம் என்க. எங்ஙனம் எனின், கடவுள் போகங்களை ஊட்டுவதெல்

லாம் அவர்கள் அப்போகங்களைத் துய்த்து, அங்ஙனந் துய்த்தல் காரணமாகப் போக்கியப் பொருள்களாகிய பிரபஞ்சப் பொருள்களில் வெறுப்படைதற் பொருட்டேயாம். இவ்வெறுப்பு அவர்கள் அந்தப் பொருள்களை அனுபவித்தல் காரணமாகவே பெறப்படுதற்குரியதாகலின், பரம பிதாவாகிய நமது பெருமான், நாம் எமது பக்குவத்தளவாக விரும்பும் பொருள்களை எல்லாம் எமக்குக் காலம் வாய்க்குந்தோறும் ஊட்டி, அங்ஙனம் ஊட்டப்பெற்றனவற்றை நாம் உண்ணும் முறையால் எமக்கு அப்பொருள்களின் கண்ணே உவர்ப்புத் தோன்றச் செய்து, அந்த உவர்ப்புக் காரணமாக நாம் உலகத்தைப் படிமுறையாக வெறுத்துத் தமது திருவடிப் பேறாகிய தெவிட்டா அமிர்தத்தை நாம் எப்போதும் அருந்தும்படி செய்வர். பிரபஞ்சப் பொருள்கள் எல்லாம் மாயையில் நின்று தோன்றி அம்மாயையிற்றானே ஒடுங்குதல் பற்றி அழிதன் மாலையவாதலின், அவற்றாற் பெறப்படும் இன்பமும் அழிதன் மாலையதேயாம். இறைவனுடைய திருவடித் தாமரையில் நின்று சுரக்கும் பேரின்பம் மாயைக்கு அப்பாற்பட்டு என்றும் நிலையுதலுள்ளதோர் பொருளாதலின், அந்த இன்பம் நித்தியானந்தம் எனப்படும். இந்த நித்தியானந்த சுகத்தை ஆன்மாக்களுக்குப் பிரசாதிக்குமாறே, கடவுள் அந்த நித்தியானந்தத்தைத் தோன்றவிடாது மறைத்துக்கொண்டு நிற்பனவாகிய சிற்றின்பங்களை முந்த ஊட்டி, அவற்றின் கண்ணே வெறுப்பைக் கிளர்த்தி, அந்த வெறுப்புக் காரணமாக நித்தியானந்தப் பொருளாகிய தமது திருவடிக் கண்ணே விருப்பை உண்டாக்குவர். பளிங்கினது சுபாவிகத்தைத் தம்பாற் கொண்ட ஆன்மாக்கள், யாதொரு பொருளிற் பற்றுதலமைந்து நிற்றற்குரியனவன்றித் தாமே தனித்து நிற்கமாட்டா. அந்த ஆன்மாக்கள் பிரபஞ்சப் பொருள்களிற் கொண்ட பற்றுக் கழன்றிடவே, இறைவனுடைய திருவடித் தாமரையாகிய பெரும் பற்றைப்பற்றி நின்றுவிடுமென்க. இதுவே இறைவன் வேண்டுவார் வேண்டியவாறு ஈந்தருளும் பெருங்கருணைத் திறத்தின் உத்தேசமாகும்.

இங்ஙனமாயின் கடவுள் ஆன்மாக்களுக்கு அவரவர் கன்மத்தளவாக ஊட்டுவர் என்று சமயசாத்திரங்கள் சொல்வது எங்ஙனம் எனின், இந்தக் கன்மங் காரணமாகவே ஆன்மாக்களுக்கு விருப்புக் கிளர்வது; கன்மங் காரணமாகக் கிளர்ந்த விருப்பைப் பரங்கருணைத் தடங்கடலாகிய கடவுள் ஊட்டுமுகத்தானே, அவ்விருப்பையும் அவ்விருப்புக்குக் காரணமாக அமைந்துள்ள கன்மத்தையும் ஒழித்திடுவர் என்க.

ஆன்மாக்களிடத்தே தீயவிருப்புக் கிளருமிடத்துக் கடவுளே அவ்விருப்பை ஊட்டிவிட்டுத் தம்மால் ஊட்டப்பெற்ற அந்த விருப்பின் பொருட்டாக ஆன்மாக்களைத் தண்டித்தல் நீதியாமோ எனின், அவ்விருப்புக் கிளர்ந்ததெல்லாம் அந்த அந்த ஆன்மாவுடைய பக்குவத்தளவாகவேயாம். அந்தப் பக்குவம் திருத்தமுறுதற்குரிய உபாயம் அந்தப் பக்குவத்தளவாகக் கிளர்ந்த விருப்பை அனுபவித்தல் வாயிலா

களேயாகலின், முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடையராகிய நமது பெருமான் எங்கள் விருப்புக்களைக் காலம் வாய்க்குந்தோறும் ஊட்டி எமது விருப்பைக் குறைத்துத் தமது திருவடி நாட்டம் எம்பால் உதிக்கச் செய்திடுவரென்க.

---

## அன்பு

அன்பென்பது ஒரு பொருள் காரணமாகப் பிறிதொன்றற்கு உளதாம் உள்ள நிகழ்ச்சி. இஃது உலகத்துள்ள நிலையியற்பொருளும் இயங்கியற் பொருளுமென்னும் இருபாலனவற்றுள் பின்னதன் பால் நிகழ்வதாம். நிலையியற் பொருளென்பன பெயர்ந்து செல்லும் ஆற்றலுடையவன்றித் தாந் தோன்றிய நிலைக்களத்தவாம்; அவை, புல், பூடு, மரம், மலை முதலாயின. இயங்கியற் பொருளென்பன எறும்பு முதல் யானை யீறுகக் கிடந்த விலங்கினத்தவும், கொதுகு, ஈ, சிட்டு முதல் பாறுந்தீறுகக் கிடந்த புள்ளினத்தவும், கோற்புழு முதல் பாம்பீறுகக் கிடந்த ஊர்ந்து செல்லினத்தவும், கயல்முதற் சுறவீறுகக் கிடந்த நீர்வாழினத்தவும், குரக்கு முதல் மக்களீறுகக் கிடந்த பகுத்தறியினத்தவுமென ஐந்து பகுதியவாம். மறித்தும் இவ்வன்பு இம்மைக்கே யுரியதூஉம், மறுமைக்கே யுரியதூஉம், இம்மை மறுமையிரண்டற்கு முரியதூஉமெனும் வகையான் முத்திறத்ததாம். மக்களொழித் தொழிந்த இயங்கியற் பொருளாவன வெல்லாம் இம்மையன்பு செய்தற்குரியன; மக்களுள்ளுங் குரங்குப் பிறப்பினீங்கிப் புதிதாய் வந்த ஒரு சாரார் இம்மையன்பே செலுத்துவர்; இவர் மக்கட் பிறப்பினருட் கடையாயா ரெனப்படுவர்; தலையாயா ரென்பார் மலங்கழன்று அறிவுச் சுடர்கொளுவி இறைவன் பாற்செலுத்தும் மறுமை யன்பொன்றே யுடையார்; இடையாயா ரெனப்படும் எம்போல்வாரே இம்மை மறுமையென்னும் இரண்டினும் அன்புடையா ரெனப்படுவர். மக்களொழித் தொழிந்த இயங்கியற் பொருளாவன வெல்லாம் தாய், தந்தை, மனைவி, கொழுநன், மக்கள் கிளையென்னும் பிறப்புரிமையால் இயல்பில் அன்புடையவாய் ஒன்றற் கொன்று வேண்டுவன விரும்பித் தேடியளித்துப் போதுவவன்றி, "இறைவனுள" னென்றும் "அவனையாம் வழுத்தற்பால" மென்றும் உணர்ச்சியுடையவாய் மறுமை யன்பு செலுத்துந் தகைமையவல்ல. மக்களுட் டலையாவார் இவ்வுலகம் அழிந்துபோந் தன்மைத்தென்றும், அவ்வாறழியும் அதன்பால் அன்பு வைத்தல் பயனுடைத்தன்றென்றும் அதனை வெறுத்து, நிலைபேறுடைய இறைவன்பால் மறுமை யன்பொன்றே செலுத்தும் பெருந்தகையாளர். இடையாவாரே "ஆற்றிலொருகால் சேற்றிலொருகால்" என்று பெரியாருரைத்த உரைக்கிணங்க இம்மை, மறுமை இரண்டினும் அன்புவைத் துடையார். இம்மை, மறுமை யன்பிரண்டும் மற்றும் ஒரு வகையாற் பொதுவுஞ் சிறப்புமென இரண்டு பெற்றியவாம்.

இம்மைப் பொதுவன்பென்பது உறவினர் மாட்டும் உற்றூர் மாட்டும் பிறர் மாட்டும் ஒரு தன்மைத்தாய் நிகழ்வது. இம்மைச் சிறப்பன்பென்பது யாவர் மாட்டும் ஒரு தன்மைப்படப் பரந்து சேறலின்றி இம்மைப் பொருளாவனவற்றுள் யாதானு மொன்றன்பால் சிறந்து நிகழ்வது ; அது தன்னுயிர் மேற்றுனும், உடல் மேற்றுனும், மக்கள் மேற்றுனும், மனைவி மேற்றுனும் ஒன்றன்பால் உறுமாற்றில் வைத்துக் கண்டு கொள்க. மறுமைப் பொதுவன்பென்பது எச்சமயிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படும் கடவுட் பொதுத் தன்மைகளான "தன் வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், வரம்பிலின்ப முடைமை, வரம்பிலாற்றலுடைமை, பேரருளுடைமை" முதலாயினவற்றையுடைய பொருளெதுவோ அது கடவுளென்னு மாத்திரையே யுணர்ந்து மற்றொன்றுனும் அப்பொருளைத் தாம் வேறுபடுத்தாது அதன் பாலன்புறுதல். மறுமைச் சிறப்பென்பது பொதுவன்பாற் பயனின்றென்றுணர்ந்து முற்கூறிய பொது விலக்கணங்களையுடைய பழம் பொருட்கு வடிவு, குணம், பெயர் முதலாயின கூட்டி யதன்பாலன்புறுதல். நடுவு நிலைமையோடு உண்மை நெறியான் நோக்குவார்க்குப் பல்வேறு வகைத்தாய்ப் பிரியும் அன்பு ஒரு பொருட்கட் சிறப்பாகவே யுறைக்குமன்றிப் பொது வகையான் நிகழ்தலிலதென்பதூஉம், அவ்வாறு நிகழினும் அது அன்பெனும் பெயர்க்குரித்தாகா தென்பதூஉம் இனிது விளங்கும். இதுபற்றி யன்றே, பல்வகைச் சமயிகளும் பொது விலக்கணங்களை யேற்றுக்கொள்ளினும் அந்நெறியே நில்லாது தத்தமக்கு அன்பு இனிது செல்லும் வழியாற் சிறப்பிலக்கணங்களுங் கூறிக்கொண்டு அப்பொருளை வழி படுவாராயினர். இப்பரிசறியாதார் பல்வகைச் சமயங்களையும் இகழ்ந்து சமயங் கடந்த நிலையில் தாம் இருப்பதாக எண்ணித் தருக்கிக் களிப்பர். அவ்வாறு கூறுவார் தாமும் நுண்ணிதாக அளந்தறிவரேல் தம் அன்பு பொதுவகையால் நிகழாதென்பதும் சிறப்புவகையால் நிகழுமென்பதும் இனிதின் அறிந்து கொள்வாரென்க. எனவே, ஒரு சமயத்தையும் தழுவாது கடவுளை வழிபடுதற்கு ஒருவரானும் இசையாதென்பதும், அவ்வாறு கூறுவார் கூற்று "யாம் ஒரு நெறியானு மின்றித் தில்லையம்பலம் போதும்" என்பார் அரியவுரையோ டினப்பட்டுப் போலிப்படு மென்பதும் தெளிய விளங்கும். ஈண்டுரைத்துப் போந்தவற்றால் அன்பினிலக்கணம் இனிது விளங்குதலாலும், உலகத்துப் பரந்து பட்டுக் கிடக்கும் பல்வகைச் சமயங்களுள் எதன் வழித்தாகச் சிறப்பன்பு செலுத்தற்பாலதென்பதும் எச்சமயத்தான் வீடுபேறு கைவரப்பெறு மென்பதும் அறிந்துகோடல் எடுத்தபொருளோ டியைபுடைத்தாயிருத்தலானும் அவ்வச் சமயக் கடவுள ரிலக்கணங்களை யாராயவே அவை யினிது விளங்குமென்பது.

## அன்பு செலுத்தப்படுவோர்

பன்முகச் சமயநெறியாளராலும் தத்தங்கடவுட்குக் கூறப்படும் பொதுவும் சிறப்புமாம் இலக்கணங்களுள் எச்சமயத்தார் தந்தலைவற்குக் கூறும் இலக்கணம் அளவையோ டியைபுடைத்தாமென்பதை நோக்குவார்க்குச் சைவ சமயமே அங்ஙனமாமென்பது இனிது விளங்கும். இதை யுணர்ந்தே பெரியோரும் "சைவநெறியே யுய்யுநெறி" 'சைவ சமயமே சமயம்' "சைவத்தின்மேற் சமயம்வேறில்லை" என்றற்றொடக்கத்த உரைகளால் உண்மை வெளிப்படுத்தியருளினார்கள். இதைப் பல்வகைச் சமயங்களையும் எடுத்துக்காட்டி விளக்கின் மிக விரிந்தோடுமாதலால், ஈண்டுப் பொதுச் சிறப்பிலக்கணங்களிற் சில வற்றை யாராய்வாம். பொது விலக்கணங்களுள் இரண்டொன்று காட்டவே ஏனையவு மடங்கும். அவற்றுள், தூயவுடம்பினனாதல், முற்றும் உணர்தல் என்னும் இரண்டு பொது விலக்கணங்களாலும் முதற் பொருளை யளந்தறிதும். கடவுளெனும் பொருள் இவ்விரண்டிலக்கணங்களுக்கும் இலக்காயிருத்தல் வேண்டுமென்பது யாவரும் ஒப்புக் கொண்டதன்றே! தூயவுடம்புடைத்தாத லென்பது எழுவகைப் பிறப்புள் ஒன்றிற் பிறவாமையும் பின்னர் இறைவாமையுமாம். முற்று முணர்தல் என்பது, ஒரு பொருளாயும், அப்பொருளினுள்ளாயும், அதற்குப் புறம்பாயும் நிறைந்து நின்று அவற்றிற்கு வேண்டுவன வற்றை யறிந்தாங்கறிதல். இவ்விரண்டிலக்கணங்களும் இல்லாத பொருள் யாது அதுவே உலகியற் பொருளாம். பாஞ்சராத்திரம் முதலாகக்கிடந்த புறச்சமயிகள் அனைவரும் தத்தங் கடவுளர் பிறந்தா ரிறந்தா ரென்றுதாமே கூறுதலானும், சைவ சமயிகள் மட்டும் தம் மிறைவன் பிறந்தானிறந்தானென்று கூறாமையானும் சைவமொழித் தொழிந்த சமயிகள் வழிபடுங் கடவுளரெல்லாம் பிறந்திறக்குந் தன்மையரான மக்களே யென்பது பெறுதும். அற்றன்று. அக்கடவுளரெல்லாம் தம்மடியாரைக் காப்பாற்றும் யொருட்டுப் பிறந்தா ரென்று அவர் கதைகளிற் கூறப்படுதலால் நீயிர் கூறியது பொருந்தாதாம் பிறவெனின்;—நன்று கூறினாய், அவர் "வரம்பிலாற்றலுடைய" கடவுளராயின் தாம் விரும்பியாங்கு இடருறாது பல்வேறு வடிவுகோடல் சாலுமாகவும், அல்குல்வாய்ப் பட்டுப் பிறந்திறத்த லென்னையோவென்பது. முக்கட்பெருமான் சிறுத்தொண்டர் முதலிய அடியார் பொருட்டுத் தாம் வேண்டும் வடிவுடையராய் வந்தமை காண்க. அல்குல் வாய்ப் பட்டுப் பிறத்தல் குற்றமுடைத் தெனின் யாண்டும் நிறைந்திருக்கும் இறைவன் ஆண்டில்லை யெனப்பட்டு வழுவாமெனின் ;— அற்றேல் அவ்வடியார் துயர்தீர்த்தற் கருவிப்பொருளினும் அவன் இருத்தல் பெறப்படுதலின் ஆண்டிருந்தே அவற்றை யியக்கிப் பயன் விளைத்தல் சாலுமாகவும் பிறந்திறக்க வேண்டிய தென்னையோ வென்பது. அன்றியும், கடவுட்டன்மையை நிறுவும் இலக்கணங்களை ஒட்டியறியாது, அடியார்க்காக எம்மிறைவன் பிறந்தானென் றொரு சமயிகூற அது

போலவே பிறிதொரு சமயியும் கூற அவற்றை ஏற்கின் உலகிற்கு ஒரு முதற் கடவுள் என்பது போய்ப் பலர் கூறும் பலரையுங் கடவுளெனக் கொள்ளும் அநேகேஸ்வர வாதப் போலியாய் முடியுமெனக் கூறி மறுக்க. ஆதலினன்றே, பிறப் பிறப்பெய்தாமையைச் சிறந்த இலக்கணமாகக் கொண்டு முக்கண்ணனுக்கே கடவுட்டன்மை கதித்தலே "எல்லார் பிறப்பு மிறப்பு மியற்பாவலர் தம், சொல்லாற்றெளிந்தே நஞ்சோணேசர்—இல்லிற், பிறந்த கதையுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்த கதையுங் கேட்டிலேம்" என்று ஆன்றோர் விளக்கி உண்மை தெளித்தார்கள். பிறப்பெய்தியாற்குத் தன்வயத்தனாதலின்மையிற்றான் பிறர் வயத்தனாய், ஐந்தவத்தையானும் உணர்வுதிரிதலிற் செயற்கை யுணர்வினனாய், வரம்புப்பட்ட மெய்யுடனியைதலின் முற்றுணர் விலனாய், பலவகைப் பற்றுடையனாதலின் பாசங்களையு முடையனாய், இடை யிடையே பல துன்பமெய்தலின் வரம்பில் துன்பமுடையவனாய், வெகுளியாதி முக்குற்றமெய்தலின் அருளிலனாய், தன்னினும் வலியுடையானிருத்தலின் ஆற்றலிலனாய் மக்கட்டன்மை யெய்துதலின் அவரெல்லாங் கடவுளராகாரென்க. இதன்றியும், வைகையடைக்க மண்சுமந்த ஞான்று வழுதி தன் கைக்கோலால் புடைத்த அடி "தார்மேனின் றிலங்குபுயவழுதி மேலுந் தன் மனைமங்கையர் மேலு மமைச்சர்மேலு, மார்மேலுஞ் சென்று பொருஞ்சேனைமேலுமயன்மேலு மான்மேலு மறவோர் மேலுந், தேர்மேல் வெம்பகன் மேலு மதியின்மேலுஞ் சிறந்துள விந்திரன் மேலுந் தேவர்மேலும், பார்மேலுங் கடன்மேலு மரங்கண் மேலும் பட்டதான் மெய்யிலடி பட்டபோதே" என்றவாறுபோலவும் அருச்சுனன் வில்லாலடித்த அடி "வேதமடி யுண்டன விரிந்த பலவாகம விதங்களடி யுண்டனவொரைம், பூதமடியுண்டன விநாழிகை முதற்புகல் செய்பொழுதொடு சலிப்பில் பொருளின், பேதமடி யுண்டன பிறப்பிலியிறப்பிலி பிறங்கலரசன் றன்மகளார், நாதனமலன் சமரவேட வடிவங்கொடு நரன் கையடியுண்ட பொழுதே" என்றவாறு போலவும் இருமுறை யாண்டும்பட்டு முக்கட்பெருமான் நிறைவை விளக்கியபோலப் பிறகடவுளர் கதைகளில் அங்ஙனங் கூறப்படாமையால் அவரெல்லாம் கடவுளராதலியாண்டையதென்க. கறைமிடற்றண்ணலே கடவுளென்பதைப் பொது விலக்கணத்தானளந்து காட்டி நிறுவினம். இனிச் சிறப்பிலக்கணத்துட் சிலவற்றானும் அங்ஙனே அளந்துரைப்பாம்.

> முக்கண் ணுடைமையுஞ் செக்கர்ச் சடையும்
> மதிபொதி முடியு நதிவளர் சென்னியும்
> விடைகடாஅய்ச் செல்லும் மிடலுங் கடல்படு
> நஞ்சு நிறுத்திய களமும் எஞ்சிய
> இடையுடை மடவரல் கெழுமிய புடையும்
> அன்னவள் விழிக்குடை மானுந் துன்னிய
> மழுவுங் கொழுந்துடை எழுநா மேனியும்
> தமருகக் கையுந் தழல்கலி கையும்

அஞ்சலென் கையும் எஞ்சா வரந்தரு
பஞ்சின் மெல்லிய பல்விரற் கையும்
ஊன்றிய கழலுந் தூக்கிய வடியும்
தேன்றுளி கொன்றையும் ஊன்றொடு தலையும்
எற்புச் சட்டகம் மூத்தலைச் சூலம்
உட்குறு தலைப்பிணை பெட்புறத் தாங்கலும்
கரியுரி போர்த்த விரிவறு பெருமையும்
அரவரைக் கசைத்த ஆண்மையும் அகல்விசும்
பணைதரு முடக்குலங் கடுப்பச் செறிவுறு
புள்ளிப் புலித்தோல் போற்றிய மருங்கும்
கள்ளப் பாசங் கழித்தலி னின்பத்
தெள்ளமிழ் தருத்தலில் அரன்சிவ னெனும்பேர்
கொள்ளலும் பிறவுங் கோனிவ னெனவே
விரித்துரை சிறப்புக் குறிக ளாமெனத்
தெரித்துரை செய்குவர் தெள்ளறி வோரே.

என்று இங்ஙனம் கூறிய வடையாளங்களனைத்தையும் ஒருங்கே கூறப்புகின் வரம்பின்றி விரியுமாதலின் ஈண்டுச் சிலவற்றைத் தந்து காட்டி யேனையவற்றைச் சமய நேர்ந்துழி விரித்துரைப்பாம். உலகத்தார்க்கொழுக்கம் நிகழ்விக்கும் ஒளிதரும் பொருள்கள், ஞாயிறு, திங்கள், தீயென்னும் மூன்றுமேயாம் இம்மூன்றையும் சைவ சமயிகளைப் போலவே தத்தங் கடவுளருக்குங் கண்களாகச் சொல்வார் வேறு பிறருளராயினும், அவ்வாறு தாஞ்சொல்வதற்கு இதுகாறும் அவர் மெய்ச்சான்று ஒன்றேனும் அக்கதைகளினின் றெடுத்துக் கூறக்கண்டிலம்; அன்றி முக்கணன் எனப் பெயர் கூறியாதல் தங்கடவுளையழைக்கக் கேட்டிலம். இதனால், அவர் கடவுளருக்கு அவர் வாய்மொழிபோலவே இறை தலைப்பட்டிலது. முக்கட் பெருமானுக்கு அப்பெயர் வாய்ந்த வாய்மை யன்றியும் அவனது மூன்று கண்களுமே ஞாயிறு திங்கள் தீ[illegible]ன்பதற்கு உமை கண்புதைத்த ஞான்று நிகழ்ந்த நிகழ்ச்சியே கரியாயதுணர்க. இத்தகைய கதை ஒன்று பிறர் புராணங்களில் காணப்பட்டிலது. அவ்வாறிருந்தால் நாம் அதைச் சென்னிமேற் கொண்டு வழுத்துவாம். நஞ்சு நிறுத்திய களம் அடியார் பொருட்டு அவர்க்கு வருந்துன்பங்களைத் தான் தன்னகத் தடக்கி அவர்க்குப் பேரின்ப மளித்தலை விளக்கும். பாசத்தை யரித்தலில் அரன் எனுந் திருப்பெயரும், அவ்வாறரித்த மாத்திரையினமையாது பேரின்பத்தையும் உடன் ஈந்து துய்ப்பித்தலின் சிவனெனுந் திருப்பெயரும் உடையவாபோலப் பிறருக் கித்தகைய பெயர்களில; அவ்வாறவர் புரிபவராயின் இடுகுறியாய் இப்பெயர்க ளெய்துதற்கோர் இடையீடின்மையறிக.

மேற்கூறிப் போந்த பகுதிகளால் அன்பு இன்னதன்மைத் தென்றும் அவ்வன்பு செலுத்தப் படுந்தன்மைக் கடவுள் சைவ சமயத்திற் கூறப்படும் சிவபெருமானே யென்றுங் காட்டப்பட்டது.

சுவாமி வேதாசலம்.

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

இ. கண்ணப்ப முதலியார்,
நெ. 43, பாளையப்பன் வீதி,
சென்னை.

---

# அறிவிப்பு

ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் அவர்களால் செய்யப் பெற்ற சிவார்ச்சனா சந்திரிகையும் அகோர சிவாசாரியரால் வியாக்யானம் செய்யப்பெற்ற அஷ்டப் பிரகரணத்துள் தத்துவ பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், ஆகிய மூன்றும் அடங்கிய புத்தகம் ஒன்றும் நம்முடைய சங்கத்தினின்றும் வெளியா யிருக்கின்றன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவார்ச்சனா சந்திரிகை .... ... ரூ. 1 0 0

தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவநிர்ணயம்
ஆகிய மூன்றும் ... . ... ,, 1 0 0

தபாற்சார்ஜ் வேறு

இங்ஙனம்:
காரியதரிசி,
சிவாகமசங்கம், தேவகோட்டை.

# திருவருள் கம்பெனி

# THIRUVARUL & Co.,

General Merchants & Booksellers, 43, Palayappen Street,
G. T. MADRAS.

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல் மெய்கண்ட விருத்தியுரை

பல நூல்களைப் படித்து அரிதில் அறியும் வேத சிவாகமங்களின் ஞானபாதப் பொருள்களை யெல்லாம் பல பிரபல பிரமாணங்களோடு இவ்வுரையில் அறியக் கூடும். ஷை சுவாமிகள் திருவுருவப் படத்தோடு, பட்டு கலிகோ பயிண்ட் செய்தது.

விலை ரூபா 4—0—0

பட்டினத் தடிகள் பிரபந்த விருத்தியுரை ரூ. 3 8 0

கம்ப ராமாயண வசனம் (திரு அவதார முதல் பட்டாபிடேகம் வரையில் 3 0 0

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| விநோதரச மஞ்சரி | 2 | 0 | பகவத் கீதை பாக்கட் சயிஸ் | 1 | 0 |
| பரமபதமார்க்கம் | 0 | 8 | ஞானத்திரட்டு | 1 | 0 |
| ஜடபாதோ பாக்கியானம் | 0 | 8 | தேவி பராக்கிரமம் | 1 | 4 |
| பூலோக இன்ப துன்பம் | 0 | 6 | சங்கீத ஞானபூஷணி | 1 | 8 |
| ஹிந்துலா | 1 | 0 | சின்மய தீபிகை | 0 | 8 |
| செந்தமிழ் வானவர் சரித்திரம் | 0 | 12 | திருமுறைத் திரட்டு (காஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பு | 2 | 8 |
| பிரபஞ்ச பாவபுண்ணியம் | 0 | 8 | மஹாபதிவிரதைகளின் சரித்திரம் | 0 | 8 |
| முக்தி சோபானம் | 0 | 8 | பன்னிரண்டு ராசாக்கள் கதை | 0 | 12 |
| இந்திரஜாலக் கதைகள் | 0 | 8 | சிகிச்சா ரத்தின தீபம் (வைத்திய நூல்) | 2 | 8 |
| பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு. சுவாமிகள் சரித்திரமு மடங்கியது. | 2 | 0 | கண்ணுசாமீயம் வைத்தியநூல் | 1 | 8 |

இவைகளன்றி இதர நாவல்களும், பாடசாலையில் வாசிக்கும் சிறுவர்களுக்கு வேண்டிய, தமிழ் வாசகங்கள், இலக்கணப் புத்தகங்கள், தேச சரித்திரங்கள் முதலியனவும் எம்மிடம் கிடைக்கும்.

## RINGWORM OINTMENT

இது சரீரத்தில் உண்டாகும் தேமல், சகலவிதமான படைகள், சொறி, காப்பான் முதலியவற்றிற்கு, ஷை சரீரத்தின் பாகத்தை கார்பாலிக் சோப் தேய்த்து சுத்தஞ் செய்து ஒருமுறை பூசினவுடன் மிகவும் குணம் தரும்.

விலை புட்டி 1-க்கு 0—8—0 1 டசன் புட்டி 5—4—0

## EUCALYPTUS OIL

யூகலிப்டஸ் ஆயில் என்னும் நீலகிரித் தயிலம் புட்டி 1-க்கு 0—4—0
1 டசன் 2—8—0

தர்மா மீட்டர் என்னும் சுரம்பார்க்கும் டிக்கிரி 0—14—0 1 டசன் 9—0—0

குறிப்பு :— ஷை புத்தகங்களுக்கும், மருந்துகளுக்கும், பாக்கிங் சிலவும் தபால் சிலவும் பிரத்தியேகம்.



Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.